# ஒரு வழிகாட்டி:

## நீண்டகால அதிகாரப் பத்திரம்

OFFICE OF THE
PUBLIC
GUARDIAN

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **பகுதி A** | **மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?** | **04** |
| | A1. மனநல ஆற்றல் என்றால் என்ன? | 04 |
| | A2. மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, அது ஏன் முக்கியமானது? | 04 |
| | A3. பொதுக்காப்பாளர் அலுவலகம் என்ன செய்கிறது? | 06 |
| **பகுதி B** | **நீண்டகால அதிகாரப் பத்திரம்** | **08** |
| | B1. யார் என் டோனியாக இருக்கலாம்? | 09 |
| | B2. எனக்கு எத்தனை டோனீகள் இருக்கலாம்? | 09 |
| | B3. எனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட டோனீகள் இருந்தால், என் சார்பாக அவர்கள் எப்படி விஷயங்களை முடிவு செய்ய வேண்டும்? | 10 |
| | B4. எத்தகைய முடிவுகளை டோனீகள் எடுக்கலாம்? | 11 |
| | B5. கட்டுப்பாடுகள் | 13 |
| | B6. விலக்கப்பட்ட முடிவுகள் | 14 |
| **பகுதி C** | **பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் மற்றும் டோனீகள் (PDD)** | **15** |
| | C1. PDD திட்டம் என்றால் என்ன? | 15 |
| | C2. பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் யார்? | 15 |
| | C3. என்னென்ன பாதுகாப்புகள் நடப்பில் உள்ளன? | 15 |
| | C4. பதிவுசெய்யப்பட்ட பணிசார்ந்த அதிகாரம் பெற்றப பிரதிநிதிகள் எவ்வாறு ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தில் டோனீயாக நியமிக்கப்படலாம்? | 17 |

**பகுதி D** **நான் நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) உருவாக்க முடிவு செய்தால் என்ன செய்ய வேண்டும்** **18**

D1. எனது நீண்டகால அதிகாரப் பத்திரத்தை எவ்வாறு உருவாக்குவது? 18

D2. இதற்கான செயல்முறை எவ்வளவு நேரம் எடுக்கும்? 20

D3. LPA பதிவு செய்யப்பட்ட பிறகு செய்ய வேண்டியவை 20

D4. யாரேனும் என்னுடைய டோனீ ஆக மறுக்க முடியுமா? 21

D5. எனது LPA பதிவு செய்யப்பட்ட பிறகு நான் என் மனதை மாற்றிக்கொள்ளலாமா? 21

D6. LPA-ஐ உருவாக்குவதற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் என்ன? 21

**பகுதி E** **மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் உள்ள ஐந்து சட்டக் கோட்பாடுகள் என்ன, அவற்றை நான் எப்படிப் பயன்படுத்துவது?** **22**

**பகுதி F** **நீண்டகால அதிகாரப் பத்திரத்தைப் பதிவு செய்வதற்கான சரிபார்ப்புப் பட்டியல்** **28**

**சொற்களஞ்சியம்** **29**

இந்த கையேடு, நீண்டகால அதிகாரப் பத்திரம் என்ன என்பதையும், நீங்கள் ஒன்றை உருவாக்க முடிவு செய்தால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் பற்றிய கண்ணோட்டத்தை வழங்குகிறது.

இந்த வழிகாட்டியில் உள்ள காட்சிகளும் எடுத்துக்காட்டுகளும் விளக்கத்திற்காக மட்டுமே. பயன்படுத்தப்படும் கதாபாத்திரங்களும் சூழ்நிலைகளும் கற்பனையானவை. அவை பொருத்தமான சந்தர்ப்பங்களில் தொழில்முறை ஆலோசனைக்கு ஈடு இல்லை மற்றும் இதேபோன்ற சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளுக்கு எந்த வகையிலும் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எந்தவொரு குறிப்பிட்ட வழக்கையும் நீதிமன்றம் எவ்வாறு தீர்ப்பளிக்கிறது என்பதையும் அவை சுட்டிக்காட்டவில்லை, ஏனெனில் அது நீதிமன்றத்திற்கு முன் இருக்கும் ஒவ்வொரு வழக்கின் உண்மைகளைப் பொறுத்தது, இதில் எடுத்துக்காட்டுகளில் சொல்லப்படாத தொடர்புடைய உண்மைகள் இருக்கலாம்.

# நாம் தொடங்கும் முன்

# பகுதி A

## மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

### A1. மனநல ஆற்றல் என்றால் என்ன?

மனநல ஆற்றல் என்பது ஒரு நபரின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுக்கும் திறன் ஆகும்.

மனநல ஆற்றல் ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது மற்றும் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலையில் உள்ள நபரின் அடிப்படையில் மட்டுமே கருத முடியாது. மேலும், ஒரு நபரின் மனநல ஆற்றல் குறைபாடு அவரது வயது, தோற்றம், நிலை அல்லது நடத்தை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே இருக்க முடியாது.

ஒரு நபருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில முடிவுகளை எடுக்கும் திறன் இருந்தும், மற்றவைகளுக்கு இல்லாமல் இருக்கலாம். உதாரணத்திற்கு, ஒரு நபர் சந்தைக்குச் சென்று உணவை வாங்க முடியலாம், ஆனால் முதலீட்டு முடிவுகளை எடுக்க பெரிய தொகையை கையாள முடியாமல் இருக்கலாம். மனநல ஆற்றல் மேம்படலாம், குறையலாம் அல்லது காலப்போக்கில் ஏற்ற இறக்கம் ஏற்படலாம்.

### A2. மனநல ஆற்றல் சட்டம் என்றால் என்ன, அது ஏன் முக்கியமானது?

மனநல ஆற்றல் சட்டம் (சட்டம்) மக்களை முன்கூட்டியே திட்டமிட உதவுகிறது மற்றும் அவர்களின் மனநல ஆற்றலை இழக்கும் முன் அவர்களின் எதிர்காலத்திற்கான முடிவுகளை எடுக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தாங்களாகவே அந்த முடிவுகளை எடுப்பதற்கான மனநல ஆற்றல் இல்லாதபோது அவர்களுக்காக முடிவுகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை இது குறிப்பிடுகிறது.

சட்டம் மேலும்:

a. மக்கள் எதிர்காலத்தில் அவர்களுக்கு மனநல ஆற்றல் குறைவாக இருந்தால், அவர்கள் சார்பாகச் செயல்படுவதற்கு தானாக முன்வந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை (டோனீ(க்கள்)) நியமித்து, நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) உருவாக்க மக்களை அனுமதிக்கிறது;

b. முடிவெடுக்க வேண்டிய ஒரு மனநல ஆற்றல் இல்லாத நபருக்கு பதிலாக பிரதிநிதித்து முடிவெடுப்பவர் இல்லாத பட்சத்தில் ஒரு நபரின் சார்பாக தீர்மானம் எடுப்பவர் முடிவுகளை எடுக்க ஒரு அதிகாரம் பெற்ற பிரதிநிதியை நியமிக்க நீதிமன்றத்தை அனுமதிக்கிறது,

c. அறிவுசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்துவிட்டால் அல்லது அவர்களின் மனநல ஆற்றலை இழந்தால்;தங்கள் குழந்தைகளுக்கான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாகவும், மற்றொரு நபரை வாரிசு அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகவும் நியமிக்க நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கிறது.


d. மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக அந்த நபரின் நன்னலன்களுக்காக எச்செயல் செய்யப்பட வேண்டும் என்பதை உள்பட சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், எவராலும் செய்யப்படும் செயல்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குகிறது;

e. மனநல ஆற்றல் இல்லாத நபர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை வழங்குகிறது;

f. மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக எந்த முடிவையும் எடுக்கவோ அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கும் எவரும் பின்பற்ற வேண்டிய ஐந்து சட்டக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது; மற்றும்

g. பொது காப்பாளர் என்ற ஒரு அதிகாரியை உருவாக்குகிறது. அவரின் கடமைகளில் LPA-களின் பதிவேட்டைப் பராமரித்தல் நீதிமன்ற உத்தரவுகளின் பதிவு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை நியமித்தல், அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் டோனீக்கள் மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முறைகேடு குற்றச்சாட்டுகளைக் கையாளுதல் ஆகியவை அடங்கும் ..

h. பதிவு செய்யப்பட்ட வல்லுநர்கள் ஊதியத்திற்காக அதிகாரம் பெற்ற பிரதிநிதி மற்றும் டோனீ சேவைகளை வழங்க அனுமதிக்கிறது.



# A3. பொதுக்காப்பாளர் அலுவலகம் என்ன செய்கிறது?

## பொது காப்பாளர்

பொது காப்பாளர் மனநல ஆற்றல் இல்லாத மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களின் கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் செயல்படுகிறார். பொது காப்பாளர் என்பவர் பொது காப்பாளர் அலுவலகத்தின் (OPG) தலைவர்.

## பொது காப்பாளரின் செயல்பாடுகள்

மனநல ஆற்றல் இல்லாத நபர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கும் பாதுகாப்பதற்கும் பொது காப்பாளர் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்கிறார்.

கீழ்கண்ட இந்த செயல்பாடுகள் இவற்றில் அடங்கும்:

a. நீண்டகால அதிகாரப் பத்திரங்களின் பதிவேடு மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை நியமிக்கும் நீதிமன்ற உத்தரவுகளின் பதிவேட்டை பராமரித்தல்;

b. அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை மேற்பார்வையிடல்

c. அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுதல்; மற்றும்

d. மனநல ஆற்றல் சட்டத்தில் உள்ள ஏதேனும் விதிமீறல், டோனீக்கள் மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிய புகார்கள் உட்பட, குற்றஞ்சாட்டப்படும் அத்து மீறல்கள் குறித்து விசாரணை.

## பொதுக்காப்பாளர் அலுவலகம் (OPG)

- பொது காப்பாளரின் செயல்பாடுகளை செய்வதில் பொது காப்பாளரின் அலுவலகம் OPG ஆதரிக்கிறது.
- OPG என்பது சமூக மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சின் ஒரு பிரிவாகும்.

## பார்வையாளர்கள் குழுவின் கடமைகள்

பார்வையாளர்கள் குழு கீழ்கண்டவற்றை செய்யவேண்டும்:

- பொது காப்பாளர் அல்லது நீதிமன்றத்தால் கேட்டுக்கொண்டபடி மனநலஆற்றல் இல்லாத நபர்களை, டோனீக்களை அல்லது பிரதிநிதிகளைப் பார்வையிட, மற்றும்
- மனநலஆற்றல் இல்லாத நபரின் நல்வாழ்வை உறுதி செய்யவும்.

இரண்டு வகையான பார்வையாளர்கள் உள்ளனர்:

a. சிறப்பு பார்வையாளர்கள் பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்கள் அல்லது மனம் அல்லது மூளையின் செயல்பாட்டில் குறைபாடு அல்லது தொந்தரவு பற்றி தொடர்புடைய நிபுணத்துவம் பெற்ற நபர்கள் மற்றும்

b. பொது பார்வையாளர்கள் - மருத்துவத் தகுதி இல்லாதவர்கள்.



# பகுதி B

## நீண்டகால அதிகாரப் பத்திரம்

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) என்பது 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய (டோனர்) மற்றும் மனநல ஆற்றல் கொண்ட ஒருவர் தானாக முன்வந்து எதிர்காலத்தில் அந்த முடிவுகளை எடுக்க அவருக்கு மனநல ஆற்றல் இல்லாதபோது, அவரது தனிப்பட்ட நலன், சொத்து மற்றும் விவகாரங்கள் அல்லது இரண்டு விஷயங்களிலும் அவர் சார்பாக முடிவுகள் எடுக்க மற்றும் செயல்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை (டோனீக்களை) நியமிக்க அனுமதிக்கும் சட்ட ஆவணமாகும்..

டோனர் தனது மனநல ஆற்றலை இழக்கும் போது பொதுவாக செயல்படுவதை நிறுத்தும் அதிகாரப் பத்திரம் போலல்லாமல், டோனர் மனநல ஆற்றலை இழக்கும் போது நீண்டகால அதிகாரப் பத்திரம் LPA செயல்படும். LPA தனிநபர்கள் அத்தகைய சாத்தியமான நிகழ்வைத் திட்டமிட அனுமதிக்கிறது. டோனீக்கு LPA-இன் கீழ் வழங்கப்படும் அதிகாரம் டோனர் மனநல ஆற்றலை இழக்கும் வரை செயல்படாது.

தனிநபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரண்டு வெவ்வேறு பரிந்துரைக்கப்பட்ட LPA படிவங்கள் உள்ளன:

1. உங்கள் சார்பாக முடிவெடுப்பதற்கான பரந்த அளவிலான அதிகாரங்களை நீங்கள் டோனீக்களுக்கு வழங்க விரும்பினால், LPA படிவம் 1 பயன்படுத்தப்படும்.

2. உங்கள் LPA-இல் சேர்த்துக் கொள்ள உங்களுக்கு கூடுதல் தேவைகள் இருந்தால், எடுத்துக்காட்டாக, உங்கள் டோனீ(களுக்கு) குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்க விரும்பினால் LPA படிவம் 2-ஐ பயன்படுத்தப்படும். இந்த LPA-ஐ உருவாக்க நீங்கள் ஒரு வழக்கறிஞரை ஈடுபடுத்த வேண்டும்.

கீழ்கண்ட விஷயங்களில் தொடர்பான முடிவெடுக்க நீங்கள் உங்கள் டோனீ(களுக்கு) அதிகாரங்களை வழங்கலாம்:

- உங்கள் தனிப்பட்ட நலன்; அல்லது
- உங்கள் சொத்து மற்றும் விவகாரங்கள்; அல்லது
- உங்கள் தனிப்பட்ட நலன் மற்றும் சொத்தும் விவகாரங்களும்.

நீங்கள் LPA படிவம் 1-ஐ நீங்களே நிரப்பலாம், ஆனால் உங்களது டோனீ(களுக்கு) இது போன்ற பரந்த அதிகாரங்களை வழங்குவதன் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியாவிட்டால் அல்லது படிவத்தை எவ்வாறு நிரப்புவது என்பது உங்களுக்குத் தெரியாமல் இருந்தால், நீங்கள் ஒரு வழக்கறிஞரை அணுக வேண்டும்.

## B1. யாரால் என் டோனீயாக இருக்க முடியும்?

உங்கள் டோனீ நம்பகமானவராகவும், நம்பிக்கைக்கு உரியவராகவும், உங்களுக்காக முடிவுகளை எடுப்பதற்குத் தகுதியானவராகவும் இருக்க வேண்டும்.

a. டோனீக்கு குறைந்தபட்சம் 21 வயது இருக்க வேண்டும்.

b. தனிப்பட்ட நலன் குறித்து முடிவெடுக்க நியமிக்கப்பட்ட டோனீ ஒரு தனிநபராக இருக்க வேண்டும்.

c. சொத்து மற்றும் விவகாரங்கள் பற்றி முடிவெடுக்க நியமிக்கப்பட்ட ஒரு டோனீ:

- ஒரு தனிநபர் (ஆனால் அவர் திவாலானவராக இருக்கக்கூடாது), அல்லது
- அறக்கட்டளை நிறுவனங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற அறக்கட்டளை நிறுவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் நியமிக்கத் தகுந்த நெருங்கிய உறவினர் இல்லையென்றால், நீங்கள் ஒரு பதிவுசெய்யப்பட்ட நிபுணரை உங்கள் பணிசார்ந்த டோனீயாக நியமிக்கலாம். மேலும் தகவலுக்கு பகுதி C-யைப் பார்க்கவும்.

## B2. எனக்கு எத்தனை டோனீகள் இருக்கலாம்?

LPA படிவம் 1-இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்களை நீங்கள் நியமிக்கலாம்.LPA படிவம் 1-இல் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையை விட அதிகமான டோனீக்களை நியமிக்க, LPA படிவம் 2-ஐப் பயன்படுத்தவும்.

இருப்பினும், நீங்கள் அதிகமான டோனீக்களை நியமிக்கக்கூடாது, ஏனெனில் அவர்கள் முடிவுகளில் உடன்படுவது கடினமாக இருக்கலாம். டோனீக்களுடன் பழகுபவர்கள், எந்த டோனீயை கையாள்வது மற்றும் எவரிடமிருந்து முடிவுகளை பெறுவது என்பதில் குழப்பம் ஏற்படலாம். கருத்து வேறுபாடுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, அதன் மூலம் எந்த முட்டுக்கட்டையும் தவிர்க்க, ஒன்றாகச் செயல்படத் தயாராக இருக்கும் டோனீக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## B3. ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை நியமித்திருந்தால், என் சார்பாக அவர்கள் எப்படி முடிவெடுக்க வேண்டும்?

ஒரே விஷயங்களைப் பற்றி முடிவெடுப்பதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட டோனீக்களை நீங்கள் நியமித்தால், பின்வரும் முறையில் செயல்பட அவர்களை நீங்கள் நியமிக்கலாம்:

- கூட்டாக: டோனீக்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும் மற்றும் அனைத்து முடிவுகளிலும் உடன்பட வேண்டும்.
- கூட்டாகவும் தனித்தனியாகவும்: டோனீக்கள் ஒன்றாக அல்லது தனித்தனியாக முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை நியமித்து, அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடவில்லை என்றால், அவர்கள் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்று சட்டம் கருதுகிறது.

சில முடிவுகள் தனிப்பட்ட நலன் மற்றும் சொத்து மற்றும் விவகாரங்கள் இரண்டையும் உள்ளடக்கியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, டோனர் முதியோர் இல்லத்தில் வசிக்க வேண்டுமா அல்லது வீட்டுடன் தங்கும் தாதியர் நியமிக்கப்பட வேண்டுமா என்று முடிவெடுப்பது, டோனரின் தனிப்பட்ட நலன் மற்றும் இந்தச் சேவைகளுக்குப் பணம் செலுத்த டோனரின் நிதிக்கான அனுமதியையும் உள்ளடக்கியது.

தனிப்பட்ட நலன் சார்ந்த முடிவுகளுக்கான டோனீ, சொத்து மற்றும் விவகாரங்கள் தொடர்பான முடிவுகளுக்கு டோனீயாகவும் இருந்தால், அதே நபர் இந்த முடிவுகளை எடுக்க முடியும்.

டோனீக்கள் வேறுபட்டால், டோனரின் நன்னலன்களுக்காக முடிவுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய அவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

## B4. எத்தகைய முடிவுகளை டோனீகள் எடுக்கலாம்?

உங்கள் LPA-இல் நீங்கள் அவருக்குக் கொடுக்கும் அதிகாரங்களைப் பொறுத்து உங்கள் டோனீ(கள்) எடுக்கக்கூடிய முடிவுகள் இருக்கும். பின்வருவனவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்க, உங்கள் டோனீயை நீங்கள் அங்கீகரிக்கலாம்:

a. உங்கள் தனிப்பட்ட நலன் (உடல்நலப் பாதுகாப்பு விஷயங்கள் உட்பட), அல்லது
b. உங்கள் சொத்து மற்றும் விவகாரங்கள் (நிதி விவகாரங்கள் உட்பட), அல்லது
c. உங்கள் தனிப்பட்ட நலன் மற்றும் உங்கள் சொத்து மற்றும் விவகாரங்கள்.

LPA ஒன்றுக்கு மேற்பட்ட டோனீக்களை கூட்டாகச் செயல்பட நியமித்து, அந்த டோனீக்களில் ஒருவரின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டால், LPA வழங்கிய அதிகாரம் ரத்து செய்யப்படும்.

எவ்வாறாயினும், LPA-இன் கீழ் ஒரு மாற்று டோனீ நியமனம் செய்யப்பட்டிருந்தால் அல்லது எந்தவொரு விஷயத்திலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் செயல்படுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்கள் நியமிக்கப்பட்டிருந்தால் LPA வழங்கும் அதிகாரம் ரத்து செய்யப்படாமல் செல்லுபடியாகும்.

### தனிப்பட்ட நலன் டோனீ

தனிப்பட்ட நலன் அதிகாரம் கொண்ட ஒரு டோனீ எடுக்க அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- டோனர் எங்கு வாழ வேண்டும்;
- டோனர் யாருடன் வாழ வேண்டும்;
- தினசரி பராமரிப்பு முடிவுகள் (உதாரணமாக, என்ன உடுத்துவது மற்றும் சாப்பிடுவது);
- என்ன சமூக நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும்;
- டோனரின் தனிப்பட்ட கடிதங்களைக் கையாளுதல்; மற்றும்
- டோனர் யாருடன் தொடர்பு வைத்திருக்கலாம்.

பின்வருவனவற்றின் போது தனிப்பட்ட நலன் டோனீ நியமனம் ரத்து செய்யப்படும்:

- டோனர் அல்லது டோனீ இறந்துவிட்டால்;
- இவை LPA-வை பாதிக்காது என LPA குறிப்பாக குறிப்படாத வரை, டோனருக்கும் டோனீக்கும் விவாகரிப்பு அல்லது திருமணம் ரத்தானால்;
- டோனீ முறையாக நியமனம் செய்யப்படுவதை நிராகரிக்கிறார்; அல்லது
- டோனீக்கு மனநல ஆற்றல் குறைவானால்.

## சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீ

சொத்து மற்றும் விவகாரங்கள் அதிகாரம் கொண்ட டோனீ எடுக்க அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு::

- டோனரின் சொத்துக்களைக் கையாளுதல் - சொத்தை வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல் மற்றும் அடமானம் வைத்தல்;
- டோனரின் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், மூடுதல் மற்றும் இயக்குதல்;
- டோனர் சார்பாக ஈவுத்தொகை, வருமானம், பரம்பரை சொத்துக்கள் அல்லது பிற நிதி உரிமைகளைப் பெறுதல்;
- டோனரின் வரி விவகாரங்களைக் கையாளுதல்;
- டோனரின் வாடகை செலுத்துதல், அடமானத்தொகை திருப்பிச் செலுத்துதல் மற்றும் வீட்டுச் செலவுகளை செலுத்துதல்;
- டோனரின் பணத்தை முதலீடு செய்தல்; மற்றும்
- டோனருக்குத் தேவையான வாகனம் அல்லது பிற உபகரணங்களை வாங்குதல்

கீழ்க்கண்ட சமயங்களில் சொத்து மற்றும் விவகாரங்கள் டோனீயின் நியமனம் ரத்து செய்யப்படும்

- டோனர் திவாலானார் அல்லது இறந்தால்;
- டோனீ (தனிநபர்) திவாலானார் அல்லது இறந்தால்;
- டோனீ ஒரு உரிமம் பெற்ற அறக்கட்டளை நிறுவனம் மற்றும் அதன் உரிமம் காலாவதியாகிவிட்டது அல்லது ரத்து செய்யப்பட்டது;
- டோனீ (உரிமம் பெற்ற அறக்கட்டளை நிறுவனம்) கலைக்கப்பட்டது, நீக்கப்பட்டது, கலைக்கப்பட்டது அல்லது நீதித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ளது;
- இவை LPA-வை பாதிக்காது என LPA குறிப்பாக குறிப்படாத வரை, டோனருக்கும் டோனீக்கும் விவாகரிப்பு அல்லது திருமணம் ரத்தானால்;
- டோனீ முறையாக நியமனத்தை மறுக்கிறார்; அல்லது
- டோனீக்கு மனநல ஆற்றல் குறைவானால்.

# B5. கட்டுப்பாடுகள்

## பொது கட்டுப்பாடுகள்

உங்களுக்கு முடிவெடுக்கும் மனநலஆற்றல் இருப்பதாக நம்புவதற்கு டோனீக்கு நியாயமான காரணங்கள் இருந்தால், உங்கள் டோனீ உங்கள் சார்பாக ஒரு முடிவை எடுக்கக்கூடாது.

குறிப்பிட்ட கட்டுப்பாடுகள்

**உங்கள் டோனீ கீழ்கண்டவற்றை செய்ய முடியாது:**

a. உங்கள் LPA-இல் அவ்வாறு செய்ய நீங்கள் டோனீக்கு வெளிப்படையாக அங்கீகாரம் வழங்காத வரையில் (மருத்துவ பரிசோதனைகள் நடத்துவது உட்பட) உங்களுக்கான சுகாதார சிகிச்சையை மேற்கொள்வதற்கு அல்லது தொடர்வதற்கு ஒப்புதல் அல்லது மறுப்பு;

b. உங்கள் உடல்நிலையில் கடுமையான சரிவைத் தடுக்கத் தேவையான உயிர்காக்கும் சிகிச்சை அல்லது வேறு ஏதேனும் சிகிச்சைக்கு ஒப்புதல் அல்லது மறுப்பு;

c. உங்களுக்காக ஏதேனும் மத்திய வருங்கால வைப்பு நிதி அல்லது காப்பீட்டு நியமனத்தை உருவாக்கவும் ரத்து செய்யவும்;

d. உங்கள் LPA-இல் அவ்வாறு செய்ய நீங்கள் அவருக்கு வெளிப்படையாக அங்கீகாரம் வழங்காத வரையில், உங்கள் சொத்தில் ஏதேனும் ஒன்றை அன்பளிப்பாக வழங்க; மற்றும்

e. கீழ்கண்டவற்றை தவிர, உங்களைத் தடுக்கும் வகையில் நடந்து கொள்வது:

- உங்களுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்கும் பொருட்டு உங்களுக்கு மனநலஆற்றல் குறைவு மற்றும் கட்டுப்பாடு அவசியம் என்று டோனீ நம்புகிறார் அல்லது நம்புவதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டிருக்கிறார், மற்றும்
- தடைச் செயல் என்பது உங்களுக்குத் தீங்கு விளைவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் தீங்கின் தீவிரத்தன்மைக்கு விகிதாசார பிரதிபலிப்பாகும்.

உங்கள் டோனீயாக இருப்பதால், உங்கள் உயில் விருப்பத்தைச் செயல்படுத்த அவருக்கு தானாகவே உரிமை இல்லை.

## B6. விலக்கப்பட்ட முடிவுகள்

உங்கள் சார்பாக சில முடிவுகள் எடுக்க உங்கள் டோனீ சட்டத்தால் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த முடிவுகள்:

| | |
|---|---|
| a. | திருமணத்திற்கு சம்மதம் |
| b. | பாலியல் ரீதியான தொடலுக்கு சம்மதம் |
| c. | மூன்று வருட பிரிவினையின் அடிப்படையில் விவாகரத்துக்கு சம்மதம் |
| d. | தத்தெடுப்பு உத்தரவை உருவாக்க ஒப்புதல் |
| e. | ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வது அல்லது கைவிடுவது |
| f. | பாலின மாற்றத்திற்கான சிகிச்சை பெறுதல் |
| g. | பாலியல் கருத்தடை சிகிச்சைக்கு ஒப்புதல் அளித்தல் அல்லது ரத்து செய்தல் |
| h. | கருக்கலைப்புக்கு ஒப்புதல் அளித்தல் அல்லது ரத்து செய்தல் |
| i. | மரணத்தின் போது எந்தவொரு நபரிடமிருந்தும் ஒரு உறுப்பை அகற்றுவது தொடர்பான ஆட்சேபனையை பதிவு செய்தல் அல்லது திரும்பப் பெறுதல் |
| j. | முன்கூட்டியான மருத்துவ வழிகாட்டுதல்களை உருவாக்குதல் அல்லது ரத்து செய்தல் |
| k. | ஒரு உடல் அல்லது உடலின் எந்தப் பகுதியையும் தானமாகத் தருதல் அல்லது திரும்பப் பெறுதல் |

# பகுதி C

## பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் (PDD) திட்டம்

### C1. பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் திட்டம் என்றால் என்ன?

PDD திட்டம் சாதாரணமிருந்து குறிப்பிடத்தக்க சொத்து வரை கொண்ட தனிநபர்களை ஆதரிக்கிறது, மேலும் அவர்களது சார்பாக தீர்மானம் எடுப்பவர்களாக இருக்க தகுந்த குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் இல்லாதிருக்கலாம். தனிநபர்கள் ஒரு பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியை டோனீயாக LPA மூலமாகவோ அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலம் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகவோ நியமிக்கலாம்.

### C2. பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் (PD) யார்?

PD-களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முறை குழுக்களின் நிபுணர்கள் (அதாவது வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள், தொடர்புடைய சுகாதார வல்லுநர்கள், செவிலியர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள்) உள்ளனர். பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் OPG-இல் பதிவுசெய்யும் முன், தகுதிபெறும் தகுதி அளவுகளை பூர்த்தி செய்து சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### C3. என்னென்ன பாதுகாப்புகள் நடப்பில் உள்ளன?

மனநல ஆற்றலை இழந்த நபரின் நன்னலன்களுக்காக தொழில்முறை பிரதிநிதிகள் செயல்படுகின்றனர். இதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:

- பணி சார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் அந்தந்த ஒழுங்குமுறை தொழில்முறை அமைப்புகளுடன் பதிவு செய்யப்படுகின்றனர், அங்கு அவர்கள் ஒழுக்கம் மற்றும் தொழில்முறையின் உயர் தரங்களை பூர்த்தி செய்து பராமரிக்க வேண்டும்.
- பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் OPG-இல் பதிவு செய்யப்படுவதற்கு கடுமையான தகுதிக்கான நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.
- பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் OPG-க்கு ஆண்டு அறிக்கையை வழங்க வேண்டும், இது “P” சார்பாக செயல்படும் பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் அவர் மனநல ஆற்றலை இழந்திருக்கும் போது எடுத்த நடவடிக்கைகளை பட்டியலிடுகிறது.

## ஜாக்கின் கதை

60 வயதான ஜாக், தனக்கு மறதி அதிகமாகிவிட்டதை சமீபத்தில் உணர்ந்தார். தனக்கு ஆரம்பகால டிமென்ஷியா இருப்பதாகவும், எதிர்காலத்தில் தன்னை தன்னால் கவனித்துக் கொள்ள முடியாது என்றும் அவர் கவலைப்படுகிறார்.

அவர் சார்பாக செயல்படவும் அவருடைய எதிர்கால பராமரிப்புக்காக பணம் செலுத்துவது உட்பட அவர் முடிவுகளை எடுக்கவும், நியமிக்க அவர் நம்பும் நெருங்கிய உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் எவரும் இல்லை. ஒரு நாள் காலையில், தைச்சி வகுப்பில் உள்ள மூத்தவர்கள் சிலர் எப்படி தங்களுடைய நீண்டகால அதிகாரப் பத்திரங்களை (LPAs) உருவாக்கினார்கள் என்பதைப் பற்றிப் பேசுவதைக் கேட்கிறார். புதிய பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்கிறார்.

அவரைப் போன்ற மூத்தவர்களுக்கு PDD திட்டம் மிகவும் உதவிகரமாக இருப்பதாக அவர் கருதுகிறார், மேலும் இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிபுணரை தனது LPAவில் தனது டோனீயாக நியமிக்க முடிவு செய்தார். ஒரு நாள் அவர் தனது மனநல ஆற்றலை இழந்தால், அவருக்கு உதவ ஒரு நம்பகமான நிபுணர் இருக்கிறார் என்பதை இப்போது அவர் அறிவார்.

**எல்லோரும் தங்கள் மனநல ஆற்றலை இழக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் மனநல ஆற்றலை எப்போது இழக்க நேரிடும் என்பது யாருக்கும் தெரியாது. மேலும், சாதாரணமிருந்து குறிப்பிடத்தக்க சொத்து வரை கொண்டிருந்து, நெருங்கிய உறவினர் அல்லது நெருங்கிய நண்பர்கள் இல்லாத நபர்களுக்கு அவர்கள் முடிவுகளை எடுக்கவும், அவர்கள் சார்பாக செயல்படவும் நியமிக்க யாரும் இல்லாதவர்கள் இந்தச் சூழ்நிலைக்கு முன்கூட்டியே திட்டமிடுவது முக்கியமானது. இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய PDD திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.**

## Q4. பதிவுசெய்யப்பட்ட பணி சார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் எவ்வாறு டோனீயாக நியமிக்கப்படலாம்?




**01 OPG இணையதளம்**
எங்கள் OPG இணையதளத்திற்குச் சென்று, பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பற்றிய பட்டியலையும் தகவலையும் பார்க்கவும்

**02 தேர்ந்தெடுத்தல்**
பட்டியலிலிருந்து உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கவும்.

**03 தொடர்பு மற்றும் ஒப்பந்தம்**
மேலும் தகவலைச் சேகரிக்க, பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியைத் தொடர்புகொள்ளவும், மேலும் டோனீயாக அவர் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதில் உடன்பாட்டிற்கு வரவும்

**04 கட்டண ஒப்பந்தம்**
நீங்கள் (டோனர்) மற்றும் பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதி இருவரும் சேவைகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை பரஸ்பரம் ஒப்புக்கொள்ளவேண்டும்

**05 சட்ட ஆவணங்கள்**
டோனீயாக செயல்படும் பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் LPA-க்கு விண்ணப்பிக்கவும்

# பகுதி D

## நான் நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) உருவாக்க முடிவு செய்தால் நான் என்ன செய்ய வேண்டும்

### D1. எனது நீண்டகால அதிகாரப் பத்திரத்தை நான் எவ்வாறு உருவாக்குவது?

| | |
|---|---|
| படி 1 | **டோனீக்கள்**<br>உங்கள் டோனீ(க்களை) புத்திசாலித்தனமாக தேர்ந்தெடுக்கவும்<br>- 21 வயது மற்றும் அதற்கு மேல்<br>- உங்கள் சார்பாகவும் உங்கள் நன்னலன்களுக்காகவும் முடிவுகளை எடுக்க நீங்கள் நம்பும் ஒருவர்<br><br>உங்கள் டோனீ(களுக்கு) என்ன முடிவெடுக்கும் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்<br>- தனிப்பட்ட நலன்,<br>- சொத்து மற்றும் விவகாரங்கள், அல்லது<br>- இரண்டும்<br><br>உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட டோனீகள் இருந்தால், அவர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள்:<br>- கூட்டாக: டோனீக்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும் மற்றும் அனைத்து முடிவுகளிலும் உடன்பட வேண்டும்.<br>- கூட்டாகவும் தனித்தனியாகவும்: டோனீக்கள் ஒன்றாக அல்லது தனித்தனியாக முடிவுகளை எடுக்கலாம்.<br>https://opg-eservice.msf.gov.sg இல் பொது காப்பாளர் இணைய அலுவலகம்(OPGO) சென்று, உங்கள் Singpass மூலம் உள்நுழைந்து, இணைய LPA படிவம் 1-ஐ நிரப்பவும். வரைவு LPA ஆனது டோனீக்கள் மற்றும் மாற்றுத் டோனீக்களுக்கு (ஏதேனும் இருந்தால்) அனுப்பப்படும். அவர்கள் தங்கள் நியமனங்களை ஏற்க வேண்டும். |
| படி 2 | **சான்றிதழ் வழங்குதல்**<br>LPA சான்றிதழ் பிறப்பிப்பவரை (CI) பார்க்கவும்<br><br>- டோனர் LPAவின் நோக்கம் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் வரம்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய சான்றிதழ் பிறப்பிப்பவர் CI ஒரு பாதுகாப்பாக செயல்படுகிறார், LPA-ஐ உருவாக்க டோனரைத் தூண்டுவதற்கு எந்தவிதமான மோசடி அல்லது தேவையற்ற வற்புறுத்தல்களும் பயன்படுத்தப்படவில்லை, LPA உருவாக்கப்படுவதைத் தடுக்கும் வேறு எந்த காரணியும் இல்லை என்பதை உறுதி செய்கிறார்.<br><br>- அவர்கள் நியமனத்தை (ங்களை) ஏற்பதற்காக உங்கள் LPA-ஐ உங்கள் டோனீ(களுக்கு)க்கு அனுப்பிய பிறகு, நீங்கள் OPGO-இல் சான்றிதழ் பிறப்பிப்பவரைத் தேடலாம்.<br><br>- உங்களின் அனைத்து டோனீ(கள்) மற்றும் மாற்றுத் டோனீ(கள்) தங்கள் நியமனங்களை ஏற்றுக்கொண்ட பிறகு, உங்கள் LPA சான்றிதழைப் பெற, சான்றிதழ் பிறப்பிப்பவரை நேரில் சென்று பார்க்கவும்.<br><br>- டோனர் மற்றும் சான்றிதழ் பிறப்பிப்பவர் CI அவர்களின் தேசிய மின்னிலக்க அடையாளத்தைப் பயன்படுத்தி LPA-இல் மின்னிலக்க முறையில் கையொப்பமிடலாம்.<br><br>- https://msf.gov.sg/opg இல் உள்ள OPG இணையதளத்தில் மலிவு விலையில் சான்றிதழ் வழங்கும் சேவைகளை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்களும் உள்ளன. |

| படி 3 | **உங்கள் நீண்டகால அதிகாரப்பத்திரத்தை (LPA ஐ) சமர்ப்பிக்கவும்**<br><br>OPGO வழியாக சான்றிதழ் பிறப்பிப்பவர் நீண்டகால அதிகாரப்பத்திரத்தை (LPA ஐ) OPGக்கு பதிவு செய்ய சமர்ப்பிக்கிறார்.<br><br>OPG உங்கள் LPA விண்ணப்பத்தை மதிப்பாய்வு செய்து, பதிவு செய்வதற்குச் செயலாக்கும், குறுஞ்செய்தி /மின்னஞ்சல் அறிவிப்புகள் மற்றும் உங்கள் OPGO டேஷ்போர்டில் நிலை புதுப்பிக்கப்படும்.<br><br>ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேதியில் சரியான ஆட்சேபணைகள் எதுவும் பெறப்படாவிட்டால், 3 வார கட்டாய காத்திருப்பு காலத்தின் முடிவில் LPA ஐ பதிவு செய்வோம்.<br><br>OPGO இல் opg-eservice.msf.gov.sg இல் உங்கள் பதிவு செய்யப்பட்ட LPA-ஐ நீங்களும் உங்கள் டோனீக்களும் பார்க்கலாம்.<br><br>நீங்கள் மனநல ஆற்றலை இழந்தால் உங்கள் டோனீக்கள் உங்கள் சார்பாக பரிவர்த்தனைகளை மேற்கொள்ள OPGO-இல் நீங்கள் பதிவுசெய்த LPA-ஐப் பயன்படுத்தலாம்.<br><br>அவ்வாறு செய்வதற்கு முன், டோனர் தனது சொந்த முடிவுகளை எடுக்க மனநல ஆற்றல் இல்லாதவர் என்று மருத்துவப் பயிற்சியாளரால் சான்றளிக்கப்பட்டுள்ளார் என்று டோனீக்கள் அறிவிக்க வேண்டும். சட்டப்பூர்வ அறிவிப்புகளில் தவறான அறிக்கைகள் வழங்கப்பட்டால் மேலும் அவர் சட்டத்தால் வழங்கப்பட்ட அபராதங்களுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் |
|---|---|

தயவுசெய்து இவைகளைக் கவனியுங்கள்:

- நீங்கள் குறைந்தபட்சம் 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் மற்றும் சரியான LPA-ஐ உருவாக்குவதற்கு மனநல ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்
- சொத்து மற்றும் விவகாரங்களை முடிவு செய்ய நீங்கள் ஒரு டோனீயை நியமிக்க நீங்கள் திவாலானவராக இருக்கக்கூடாது.

LPA பதிவு செய்ய விண்ணப்பிக்கும் ஒருவர், பொருள் விஷயத்தில் தெரிந்தே தவறான அறிக்கையை வெளியிடுவது குற்ற செயலாகும். இந்த குற்றத்திற்காக தண்டனை பெறும் ஒரு நபருக்கு $10,000 வரை அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

## D2. செயல்முறை எவ்வளவு காலம் எடுக்கும்?

LPA பதிவு செய்யப்படுவதற்கு, கட்டாய 3 வாரக் காத்திருப்பு காலத்தைத் தவிர்த்து, சுமார் 8 வேலை நாட்கள் ஆகும்.

ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேதியில் சரியான ஆட்சேபனைகள் எதுவும் பெறப்படாவிட்டால், கட்டாய 3 வார காத்திருப்பு காலத்தின் முடிவில் LPA ஐ பதிவு செய்வோம்.

## D3. LPA பதிவு செய்யப்பட்ட பிறகு செய்ய வேண்டியவை

நீங்கள் மனநல ஆற்றலை இழந்தால், உங்களின் டோனீ(கள்) உங்களுக்காக முடிவுகளை எடுக்க உங்கள் LPA ஒரு முக்கியமான ஆவணமாகும். உங்கள் LPA பதிவு செய்யப்பட்ட பிறகு, நீங்களும் உங்கள் டோனீ(களும்) OPGO வழியாக பதிவு செய்யப்பட்ட LPA-ஐ காணலாம்.

நீங்கள் மனநலஆற்றலை இழந்தால், டோனீ(கள்) உங்கள் சார்பில் செயல்பட நீங்கள் LPA பதிவு செய்துள்ளீர்கள் என்பதை டோனீ(கள்) அணுகவேண்டிய மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். கீழ்க்கண்டவை இவற்றில் அடங்கும்:

- உங்கள் மருத்துவர் மற்றும் பிற சுகாதார பராமரிப்பு வழங்குநர்கள், மற்றும்

- உங்கள் வங்கி, மத்திய வருங்கால வைப்பு நிதி வாரியம் மற்றும் நீங்கள் கணக்கு வைத்திருக்கும் பிற நிறுவனங்கள் (சென்ட்ரல் டெபாசிட்டரி பிரைவேட் லிமிடெட், காப்பீட்டு நிறுவனங்கள், பங்குத் தரகர்கள் போன்றவை).

வெவ்வேறு மூன்றாம் தரப்பு அமைப்புகளுக்கு வெவ்வேறு தேவைகள் உள்ளன. நீங்கள் மனநல ஆற்றலை இழந்தால், உங்கள் பதிவு செய்யப்பட்ட LPA-ஐப் பயன்படுத்த, உங்கள் டோனீ இணங்க வேண்டிய தேவைகள் குறித்து அவர்களுடன் நீங்கள் சரிபார்க்க விரும்பலாம்.

## D4. யாரேனும் என்னுடைய டோனீயாக இருக்க மறுக்க முடியுமா?

OPGO-இல் உங்கள் LPA-இல் ஒரு டோனீ தனது நியமனத்தை நிராகரிக்கலாம் மற்றும் உங்களுக்கு அந்த செய்தி குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். உங்கள் LPA-வை மாற்றியமைத்து புதிய டோனீ(களை) நியமிக்க வேண்டும்.

## D5. எனது LPA பதிவு செய்யப்பட்ட பிறகு நான் என் மனதை மாற்றலாமா?

a. அவ்வாறு செய்ய உங்களுக்கு மனநல ஆற்றல் இருக்கும்போது, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் LPA-ஐ ரத்து செய்யலாம்.

b. நீங்கள் மனநல ஆற்றலை இழந்தால், LPA-ஐப் பயன்படுத்துவதைத் தடுக்க, LPA ரத்து செய்யபட்டதை நீங்கள் டோனீக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

c. LPA ரத்து செய்யபட்டதை பற்றி நீங்கள் பொதுக்காப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும். நடைமுறையில் உள்ள ரத்து கட்டணம் பொருந்தும். LPA-ஐ எவ்வாறு ரத்து செய்வது என்பது பற்றிய விவரங்களுக்கு OPG இணையதளத்தைப் பார்க்கவும்.

## D6. LPA வை உருவாக்குவதற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் என்ன?

LPA-ஐ உருவாக்குவதற்கான கட்டணங்கள் பின்வருமாறு:

a. LPA சான்றளிப்பதற்கு சான்றிதழ் பிறப்பிப்பவருக்குச் செலுத்த வேண்டிய தொழில்முறைக் கட்டணம். வசூலிக்கப்படும் கட்டணம் சான்றிதழ் பிறப்பிப்பவரைப் பொறுத்து மாறுபடும்.

b. உங்கள் LPA-ஐ பதிவு செய்ய OPGக்கு செலுத்த வேண்டிய விண்ணப்பக் கட்டணம். msf.gov.sg/opg இல் உள்ள கட்டண அட்டவணையைப் பார்க்கவும்.

c. உங்கள் டோனீயாக ஒரு பணிசார்ந்த அதிகாரம் பெற்ற ப்ரதிநிதியை நியமித்தால், பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவருடைய சேவைகளுக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும்.

# பகுதி E

## மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் உள்ள ஐந்து சட்டக் கோட்பாடுகள் என்ன, அவற்றை நான் எப்படிப் பயன்படுத்துவது?

சட்டப்பூர்வமான கொள்கைகள் தனிநபர் முடிவெடுக்கும் செயல்பாட்டில் முடிந்தவரை பங்கேற்க உதவுகின்றன, மேலும் அவ்வாறு செய்ய அவருக்கு மனநல ஆற்றல் இல்லாதபோது அவரைப் பாதுகாக்கிறது.

மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக முடிவுகளை எடுக்கும்போது அல்லது செயல்படும்போது, ஒவ்வொரு விஷயத்திலும் தகுந்த நடவடிக்கை அல்லது முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மனநல ஆற்றல் சட்டத்தில் உள்ள விதிகளுடன் இந்த கோட்பாடுகளை படிக்க வேண்டும்.

| மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் 5 சட்டப்பூர்வ கோட்பாடுகள் |
|---|
| கொள்கை 1: மனநல ஆற்றல் அனுமானம் |
| கொள்கை 2: அனைத்து நடைமுறை உதவிகளையும் வழங்குதல் |
| கொள்கை 3: விவேகமற்ற முடிவு |
| கொள்கை 4: நன்னலன் |
| கொள்கை 5: குறைவான கட்டுப்பாடு |

### கொள்கை 1: மனநல ஆற்றல் அனுமானம்

ஒரு நபர் தனக்குத் தேவையான நேரத்தில் முடிவெடுக்கும் மனநல ஆற்றல் இல்லை என்பதற்கான ஆதாரம் இல்லாவிட்டால், தனக்கென ஒரு முடிவை எடுக்கும் மனநல ஆற்றல் அவருக்கு உள்ளது என்று கருத வேண்டும்.

மனநல ஆற்றல் குறைபாட்டை மதிப்பிடுவது நபரின் தோற்றம், வயது, நிலை அல்லது நடத்தை ஆகியவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. எனவே, மக்கள் தங்களால் இயன்றவரை சுயமாக முடிவெடுக்க அனுமதிக்க வேண்டும்.

**சாந்தியின் கதை**

சாந்தி சந்து 66 வயதான விவாகரத்து பெற்றவர், அவர் மின்தூக்கி இல்லாத அடுக்குமாடி குடியிருப்பில் தனியாக வசிக்கிறார். இவரது குழந்தைகள் ஆறு மாதங்களுக்கு முன் சாலை விபத்தில் உயிரிழந்தனர்.

சாந்தி சமூகத்தில் சுறுசுறுப்பாகவும், உள்ளூர் நடவடிக்கைகளில் பங்கேற்பவராகவும், குடியுரிமைக் குழு நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு செய்பவராகவும், இருந்தார். விபத்து நடந்ததிலிருந்து அவர் யாரிடமும் பேசுவதில்லை.

அடுக்குக்குடியிருப்பு தொகுதிக் குழு சுகாதார பேச்சு மற்றும் இலவச சுகாதார பரிசோதனை நடவடிக்கையை ஏற்பாடு செய்கிறது. நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதில் பங்களிக்கும் மனநல ஆற்றல் சாந்திக்கு இல்லை என்று அவர்கள் கருதுவதால், அவரைத் தவிர்க்க குழு பரிசீலித்து வருகிறது.

**யாரிடமும் பேசாமல் தனியாக வாழ்வதால் சாந்திக்கு மனநல ஆற்றல் குறைவு என்று ஏற்பாட்டுக் குழுவினர் கருதக்கூடாது. வேறுவிதமாக நிரூபிக்கப்படாத வரை ஒரு நபர் மனநல ஆற்றல் கொண்டவராக கருதப்படுகிறார். சாந்தியை அழைப்பது குறித்து ஏற்பாட்டுக் குழு பரிசீலிக்க வேண்டும். அதில் ஈடுபடுவதும் விரும்பாததும் அவர் விருப்பம்.**

### கொள்கை 2: அனைத்து நடைமுறை உதவிகளையும் வழங்குதல்

ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பதில் சிரமம் இருக்கும் ஒருவரைப் பராமரிக்கும் அல்லது சிகிச்சை அளிக்கும் பராமரிப்பாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், டோனீக்கள், அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள், அந்த நபர் தனது சொந்த முடிவை எடுப்பதற்கு உதவ அனைத்து நடைமுறை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அவர்கள் ஒரு முடிவை எடுக்க உதவும் போது அவர்கள் ஆதரிக்கும் நபருக்கு வற்புறுத்தல் கொடுக்கவோ அல்லது அவர்களின் கருத்துக்களை திணிக்கவோ கூடாது. நபர் எந்த வகையான ஆதரவைப் பெற வேண்டும் என்பது அவர் எடுக்க வேண்டிய முடிவு மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தது.

ஒரு நபருக்குத் தொடர்புகொள்வதில் சிரமம் இருப்பதால், அந்த நபர் சார்பாக ஒரு முடிவை எடுக்கக் கூடாது. அதற்கு பதிலாக, தனிநபர், எடுத்துக்காட்டாக, பெரிய எழுத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் போன்ற அணுக்கக்கூடிய வடிவங்களில் தகவலை வழங்குவதன் மூலமும், சைகை மொழி, பிரெய்லி போன்ற பல்வேறு வகையான தகவல்தொடர்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் ஆதரவை வழங்க வேண்டும்

## டிம்மின் கதை

பான் ஐலேண்ட் விரைவுச்சாலையில் ஒரு பாலத்தின் அடியில் வசிக்கும் நடுத்தர வயது மனிதரான டிம்மை பல காவல் அதிகாரிகள் கண்டனர். அவர் மிகவும் அழுக்காக இருக்கிறார் மற்றும் அவரது கால் ஒரு பெரிய வெட்டுக்காயத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. காவல் அதிகாரிகள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள்

மருத்துவமனை ஊழியர்கள் டிம்மின் தனிப்பட்ட விவரங்களையும் அவர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய உறவினர்களையும் கேட்கிறார்கள். அவரைத் தொடர்புகொள்வதற்கு உதவ, இந்த விசாரணைகள் பல மொழிகளில் செய்யப்படுகின்றன. டிம் அமைதியாக இருக்கிறார், மேலும் அவரது காயத்தை பரிசோதிக்க விரும்பும் மருத்துவருடன் ஒத்துழைக்க விரும்பவில்லை.

காயத்திற்கு சிகிச்சையளிக்கப்படாவிட்டால், அவர் தனது காலை இழக்க நேரிடும் என்றும், நிலைமையை அவருக்கு விளக்கும் முயற்சியில் மருத்துவர் டிம்மிடம் அவரது காலை அறுப்பது போல் சைகை செய்கிறார். அதற்குப் பிறகு அவர் அதிக கவனம் செலுத்துவதாகத் தோன்றுகிறது மற்றும் அவர் வாய் மற்றும் காதுகளை சுட்டிக்காட்டி தலையை அசைக்கிறார்.

டிம் ஒரு காது கேளாத ஊமையாக இருக்கலாம் என்பதை ஒரு தாதியர் உணர்ந்து, அவருக்கு ஒரு காகிதத்தையும் பேனாவையும் கொடுத்து, சைகை மொழி தெரிந்த ஒருவரை அழைக்கிறார். அவர் அமைதியாகி, மருத்துவமனை ஊழியர்களுடன் எழுத்துப்பூர்வமாக தொடர்பு கொள்ளத் தொடங்குகிறார்.

**டிம் வாய்மொழியாக தொடர்பு கொள்ள முடியாமல் இருந்திருக்கலாம், ஆனால் அவரது சிகிச்சை குறித்து அவரால் முடிவெடுக்க முடியாது என்று அர்த்தமில்லை. டிம் தனது முடிவை எடுப்பதற்கும் தெரிவிப்பதற்கும் ஆதரவாக அனைத்து நடைமுறை உதவிகளையும் செய்து மருத்துவக் குழு சரியானதைச் செய்துள்ளது.**

**அவசரகால சூழ்நிலைகளில், எடுத்துக்காட்டாக, ஒரு விபத்தில் கடுமையான காயம் ஏற்படும் பொழுது, ஒரு நபர் தனது சொந்த முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவாக பல நடவடிக்கைகளை எடுப்பது நடைமுறையில் சாத்தியமல்ல. என்ன நடக்கிறது மற்றும் ஏன் நடைமுறைகள் செய்யப்படுகின்றன என்பதை அந்த நபருக்குத் தெரியப்படுத்துவதே இந்த சூழ்நிலையில் சரியாக இருக்கும்**

### கொள்கை 3: விவேகமற்ற முடிவு

அந்த முடிவுகள் மற்றவர்களின் பார்வையில் விவேகமற்றதாக இருந்தாலும் ஒரு நபர் தனது சொந்த முடிவுகளை எடுக்க சுதந்திரம் கொண்டவர். இது ஒரு நபர் தனது சொந்த விருப்பங்களைச் செய்வதற்கான உரிமையை அங்கீகரிக்கிறது. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அந்த நபர் மனநல ஆற்றலை இழந்துவிட்டார் என்று அர்த்தமல்ல.

இருப்பினும், ஒரு நபர் விவேகமற்ற முடிவெடுப்பதற்கும் (முடிவெடுக்கும் நபர் எடுக்கும் முடிவு) மற்றும் முடிவெடுப்பதற்குத் தேவையான தகவலைப் புரிந்துகொள்வதற்கும், நினைவில் வைத்துக்கொள்வதற்கும் அல்லது பயன்படுத்துவதற்கும் மனநல ஆற்றல் இல்லாதபோது அவர் முடிவெடுப்பதற்கும் வித்தியாசம் உள்ளது.

ஒரு நபரின் வழக்கமான நடத்தையை மனதில் கொண்டு வழக்கத்திற்கு மாறான பல முடிவுகளை அவர் எடுத்தால், அல்லது அவர் எளிதாக சுரண்டப்படுவதை அல்லது அவருக்கு தீங்கு ஏற்படுவதை எளிதாக்கும் முடிவுகளை எடுத்தால், அந்த நபரின் மனநல ஆற்றல் குறித்து மேலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

#### ஆ ஹுவாத்தின் கதை

ஆ ஹுவாட்டுக்கு 73 வயது. மனைவியை இழந்த இவர் தனியாக வசித்து வருகிறார். கடந்த வாரம், பால் என்ற ஜன்னல் பொருத்துபவர் ஆ ஹுவாட்டை அவரது வீட்டிற்குச் சென்று பார்த்தார். அவரது குளியலறையில் உள்ள ஜன்னலில் துருப்பிடித்திருப்பதால் அதை மாற்றுமாறு ஆ ஹுவாட்டை பால் சம்மதிக்க வைக்கிறார். அடுத்த நாள், பால் திரும்பி வந்து அவரது படுக்கையறையில் உள்ள ஜன்னல்களை மாற்றுமாறு ஆ ஹுவாட்க்கு அறிவுறுத்துகிறார். பால் ஆ ஹுவாட் இடமிருந்து $500 வசூலிக்கிறார்.

ஆ ஹுவாட்டின் மகன் ஆ செங் தனது தந்தையைப் பற்றி கவலைப்படுகிறார். ஆ ஹுவாட் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதால், நிதி விஷயத்தில் பொதுவாகக் கவனமாக இருப்பார்.

பால் மூன்றாவது முறையாகத் திரும்புகிறார், ஆ ஹுவாட் தனது வீட்டில் மீதமுள்ள ஜன்னல்களை $1500க்கு மாற்ற ஒப்புக்கொண்டார். முன்னதாக ஜன்னல்களை ஆராய்ந்த ஆ செங், அவை இன்னும் நல்ல நிலையில் இருப்பதையும், மாற்ற வேண்டிய அவசியமில்லை என்பதையும் கவனித்தார். பால் தனது தந்தையைப் பயன்படுத்திக் கொண்டதாக அவர் நம்புகிறார், மேலும் ஆ ஹுவாட் இதேபோன்ற செலவு செய்யும் முடிவுகளை எடுக்க மனநல ஆற்றலுடன் இருக்கிறாரா என்று யோசிக்கிறார்.

அவர் ஒரு சிறந்த பேரம் பெறுவதால், ஜன்னல்களை ஒரே நேரத்தில் மாற்ற விரும்புவதாக ஆ ஹுவாட் விளக்குகிறார். ஓரிரு வருடங்களில் அனைத்து ஜன்னல்களும் மாற்றப்பட வேண்டும் என்று அவர் நம்புகிறார்.

**அவரது தந்தை, ஆ ஹுவாட் 73 வயதாகிவிட்டதாலும், தனது வீட்டில் உள்ள அனைத்து ஜன்னல்களையும் மாற்ற முடிவு செய்துள்ளதாலும், அவருக்கு மனநல ஆற்றல் இல்லை என்று ஆ செங் கருத கூடாது. ஆ ஹுவாட்டின் வழக்கமான நடத்தை தொடர்ந்து மாறி கவலையை ஏற்படுத்தினால், ஆஹ் செங் அவரது மனநல ஆற்றலை மருத்துவரிடம் பரிசீலிக்க வேண்டும்.**

## கொள்கை 4: நன்னலன்

மனநல ஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக எடுக்கப்படும் ஒவ்வொரு செயல் அல்லது முடிவும் அவரது நன்னலனுக்காக எடுக்கப்பட வேண்டும். ஒரு நபரின் நன்னலன்களுக்காக ஒரு முடிவு எடுக்கப்படுகிறதா என்பது அதனதன் சூழ்நிலையைப் பொறுத்தது.

### ரானின் கதை

கெவின் கூ மற்றும் அவரது மனைவி சாலி லீ ஆகியோருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். அவர்களின் மூத்தவர், 23 வயதான ரான், அறிவுசார் ஊனமுற்றவர் மற்றும் ஒரு தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் பாதுகாக்கப்பட்ட பட்டறையில் பணிபுரிந்து வருகிறார்.

மேலும் சுதந்திரமான வாழ்க்கைக்கான அடிப்படை வாழ்க்கைத் திறன்களைப் பெற ரான் போன்ற நபர்களுக்கு தற்காலிக வசிப்பிடத்தை வழங்கும் திட்டத்தையும் தொண்டு நிறுவனம் கொண்டுள்ளது. சில ஆதரவுடன், பொதுப் போக்குவரத்தை எவ்வாறு உபயோகிப்பது என்பதும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இந்த வாழ்க்கைத் திறன்கள் அவர்கள் திறந்த வேலைவாய்ப்பிற்கு மேலும் பொருத்தமானவர்களாக இருக்க உதவுகின்றன.

குடியிருப்புத் திட்டத்தில் ஒரு இடம் காலியாகிறது , மேலும் தொண்டு நிறுவனத்தில் உள்ள சமூகப் பணியாளர்கள் ரான் இந்த வாய்ப்பைப் பெற பரிந்துரைக்கின்றனர்.

கெவின் மற்றும் சாலி, ரான் இன்னும் சுதந்திரமாக இருக்க விரும்புகிறார் என்பதை அறிவார்கள். இருப்பினும், ரான் இந்த வாய்ப்பை எடுத்துக் கொண்டால், அவர்களால் ரானைப் பார்த்துக்கொள்ள முடியாது, மேலும் அவர் அவர்களுடன் குறைந்த நேரத்தை செலவிடுவார் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

**குடியிருப்பு திட்டத்தைப்பற்றி முடிவெடுக்கும் மனநல ஆற்றல் ரானுக்கு இருந்தால், கெவினும் சாலியும் அவருக்காக முடிவு செய்யக்கூடாது. ரானுக்கு இந்த முடிவை எடுக்கும் மனநல ஆற்றல் இல்லை என்றால், கெவின் மற்றும் சாலி அவர்கள் ரானின் நன்னலன்களுக்காக செயல்பட வேண்டும், தங்கள் சொந்த நலன்களுக்காக செயல்பட கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

## கொள்கை 5: குறைவான கட்டுப்பாடு

மனநலஆற்றல் இல்லாத ஒரு நபரின் சார்பாக செயல்படும் போது அல்லது முடிவெடுக்கும் போது, எடுக்கப்படும் நடவடிக்கை அல்லது முடிவு அந்த நபரின் உரிமைகள் மற்றும் செயல்படும் சுதந்திரத்தை குறைவாக கட்டுப்படுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும்.

குறைவான கட்டுப்பாடான விருப்பம் பொதுவாக அந்த நபரின் நன்னலன்களுக்கான விருப்பமாகும்.

சில நேரங்களில், எந்த நடவடிக்கை அல்லது முடிவு எடுக்காமல் இருப்பதும் இதில் அடங்கும். எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் முடிவுகளும் அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்காத முடிவுகளும் நபரின் நன்னலன்களுக்காக எடுக்கப்பட வேண்டும்.

### ஆ மேய்யின் கதை


ஆ மேய் டிமென்ஷியா நோயால் பாதிக்கப்பட்ட தனது 80 வயதான தாயார் மேடம் குவாங் சியூ மோயுடன் வசித்து வருகிறார்.

ஆ மெய் வேலைக்குச் செல்லும்போது, அவர் தன்னைத் தானே காயப்படுத்திக்கொள்வதையோ அலைந்து திரிவதையோ தடுக்க தன் தாயை அவரது அறையில் பூட்டி வைக்கிறார். அவர் உணவையும் தண்ணீரையும் அறையில் வைத்திருக்கிறார், மேடம் குவாங் மூதோர்க்கான டயப்பர்களை அணிந்துள்ளார்.

ஆ மெய் மாலையில் வீடு திரும்பியதும், தன் தாயை குளித்துவிட்டு உணவளிப்பாள். ஆ மெய் தனது தாயின் பாதுகாப்பில் அக்கறை கொண்டு செயல்படுகிறார், மற்றும் ஒரு பொறுப்பான மகள் என்றாலும், இந்த வகையான கவனிப்பு குறைவான கட்டுப்பாடுகலுள்ளதல்ல

மேடம் குவாங்கை டிமென்ஷியா பகல்நேர பராமரிப்பு மையத்தில் வைப்பது போன்ற வேறு சில பொருத்தமான பராமரிப்பு ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும்.

**ஒன்றுக்கு மேற்பட்ட விருப்பங்கள் இருந்தால், அனைத்து விருப்பங்களும் எடைபோடப்பட வேண்டும் மற்றும் எடுக்கப்பட்ட முடிவு நன்னலன்கள் மற்றும் குறைவான கட்டுப்பாட்டு விருப்பக் கொள்கைகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்.**



# பகுதி F

## நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) பதிவு செய்வதற்கான சரிபார்ப்புப் பட்டியல்

| இல்லை | செய்யவேண்டியவை | முடிந்ததா? |
|---|---|---|
| 1 | Singpass-ஐப் பயன்படுத்தி OPGO-இல் உள்நுழைந்து, 'Apply For An LPA' என்பதைக் தேர்ந்தெடுக்கவும் . | ☐ |
| 2 | டோனீ(கள்) மற்றும் மாற்று டோனீ(கள்) (ஏதேனும் இருந்தால்) தகவல் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்களை நிரப்பவும். | ☐ |
| 3 | டோனீ(கள்) மற்றும் மாற்று டோனீ(கள்) (ஏதேனும் இருந்தால்) நியமனங் (களை) ஏற்க அவர்கள் Singpass-ஐப் பயன்படுத்தி OPGO-இல் உள்நுழைய வேண்டும். | ☐ |
| 4 | அனைத்து டோனீ(கள்) மற்றும் மாற்றுத் டோனீக்கள் (ஏதேனும் இருந்தால்) நியமன ங்(களை) ஏற்றுக்கொண்ட பிறகு, LPA படிவத்தை சான்றளிக்க, சான்றிதழ் பிறப்பிப்பவரை (CI) நேரில் சென்று பார்க்கவும். | ☐ |
| 5 | டோனர் மற்றும் சான்றிதழ் பிறப்பிப்பவர் LPA-இல் மின்னிலக்க கையொப்பம் இடுவார்கள். உடனடியாக OPGO வழியாக OPG-க்கு பதிவு செய்ய சான்றிதழ் பிறப்பிப்பவர் LPA-ஐ சமர்ப்பிக்கிறார் | ☐ |
| 6 | தேவைப்பட்டால் OPGO-இல் இணைய மூலம் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தவும். | ☐ |

# சொற்களஞ்சியம்

## பராமரிப்பு அல்லது சிகிச்சையின் தொடர்பில் செயல்படுதல்

இவை, பராமரிப்பாளர்கள் (பணம் அல்லது ஊதியம் பெறுபவர்கள் அல்லது பெறாதவர்கள்), சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளாகும். இந்தச் செயல்களுக்குச் சம்மதிக்கும் மனநல ஆற்றல் இல்லாத நபருக்கு தனிப்பட்ட பராமரிப்பு, உடல்நலம் அல்லது மருத்துவ சிகிச்சை ஆகியவை அடங்கும்.

## நன்னலன்

மனநல ஆற்றல் இல்லாத நபரின் சார்பாக முடிவெடுப்பதற்கு முன், அவருக்கு எது சிறந்தது என்பதன் பல காரணிகளைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்க கடமைப்பட்டுள்ளனர். மேலும் தகவலுக்கு நடைமுறை விதிமுறைகளின் 6-வது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## நடைமுறை விதிமுறைகள்

நடைமுறை விதிமுறைகள் மனநல ஆற்றல் சட்டத்தை (சட்டம்) ஆதரிக்கிறது மற்றும் நடைமுறையில் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான கூடுதல் விளக்கத்தை வழங்குகிறது.

## தீர்மானம் எடுப்பவர்

தீர்மானம் எடுப்பவர் மனநல ஆற்றல் இல்லாத நபர்களின் சார்பாக முடிவுகளை எடுக்கும் தனிநபர் அல்லது நபர். அவர்களில் பராமரிப்பாளர்கள், செவிலியர்கள், மருத்துவர்கள், நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) டோனீக்கள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் அடங்குவர்.

## அதிகாரம் பெற்ற பிரதிநிதி

மனநல ஆற்றல் இல்லாத நபருக்கு அவர் சார்பாக முடிவெடுக்க டோனீ இல்லாமையிலும், அவர் LPA பதிவும் செய்யாதபோதும், அந்நபரின் சார்பாக சில முடிவுகளை எடுக்க நீதிமன்றத்தால் ஒரு அதிகாரம் பெற்ற பிரதிநிதி நியமிக்கப்படுகிறார். அவர் மனநல ஆற்றல் ஒழுங்குமுறைகளால் பரிந்துரைக்கப்பட்ட, அறக்கட்டளை (டிரஸ்ட்) கம்பெனிகள் சட்டத்தின் (கேப். 336) கீழ் ஒரு உரிமம் பெற்ற அறக்கட்டளை நிறுவனமாகவோ ஒரு தனிநபராகவோ இருக்கலாம்.

## டோனர்

குறைந்தபட்சம் 21 வயதுடைய நபர், LPA செய்து, ஒரு நாள் மனநல ஆற்றலை இழந்தால், அவரது தனிப்பட்ட நலன் மற்றும்/அல்லது சொத்து மற்றும் விவகாரங்களைக் கவனித்துக்கொள்வதற்காக டோனீ(களை) நியமிப்பார்.

## டோனீ

டோனீக்கள், குறைந்தபட்சம் 21 வயது நிரம்பியவர்கள், டோனர்களால் தனிப்பட்ட நலன் மற்றும்/அல்லது சொத்து மற்றும் விவகாரங்களில் தங்கள் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதற்கான மனநல ஆற்றல் இல்லாத பட்சத்தில் அவர்கள் சார்பாக முடிவுகளை எடுக்கவும், செயல்படவும் நியமிக்கப்படுகிறார்கள்.

## கூட்டாக

டோனீக்கள் ஒன்றாகச் செயல்பட வேண்டும் மற்றும் அனைத்து முடிவுகளிலும் உடன்பட வேண்டும்.

## கூட்டாகவும் தனித்தனியாகவும்

டோனீக்கள் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ முடிவுகளை எடுக்கலாம்.

## நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA)

டோனர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட டோனீக்களை தானாக முன்வந்து நியமிக்கவும், அவர் தனது சொந்த முடிவுகளை எடுக்கும் மனநல ஆற்றலை இழந்தால் அவர் சார்பாக செயல்படவும் அனுமதிக்கும் சட்ட ஆவணம்.

## மனநல ஆற்றல்

மனநல ஆற்றல் என்பது ஒரு நபரின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுக்கும் திறன் ஆகும்.

## மனநல ஆற்றல் சட்டம்

மனநல ஆற்றல் இல்லாத நபர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புகளை வழங்குகிறது. இந்தச் சட்டம், பொது காப்பாளர் மேற்பார்வை மற்றும் விசாரணை அதிகாரங்களை வழங்குகிறது மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களால் மனநல ஆற்றல் இல்லாத நபர்களை தவறாக நடத்துவதை குற்ற செயலாக ஆக்குகிறது. மனநல ஆற்றல் இல்லாத நபரின் சார்பாக சில முடிவுகள் எடுக்கப்படுவதையும் சட்டம் தடை செய்கிறது.

## பொது காப்பாளர் அலுவலகம் (OPG)

மனநல ஆற்றல் சட்டத்தின் கட்டமைப்பிற்குள் OPG பரந்த அளவிலான பொறுப்புகளைக் கொண்டுள்ளது. LPA-களின் பதிவேட்டை வைத்திருப்பது, அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தவறான முறையில் நடத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

## பொது காப்பாளர் இணைய அலுவலகம் (OPGO)

OPGO என்பது OPG உடனான பரிவர்த்தனைகளுக்கான எளிய, பாதுகாப்பான மற்றும் வசதியான இணைய தளமாகும். OPGO-இல் கிடைக்கும் பரிவர்த்தனைகளில் LPA-க்கு விண்ணப்பித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற பிரதிநிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் ஆகியவை அடங்கும். OPGO-ஐ இங்கே அணுகவும்: https://opg-eservice.msf.gov.sg

## பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், டோனீகள் (PDD) திட்டம்

அவர்களது சார்பாக தீர்மானம் எடுக்கும் நபர்களாக இருக்க குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் இல்லாத சாதாரணமிருந்து குறிப்பிடத்தக்க சொத்து கொண்ட தனிநபர்களை PDD திட்டம் ஆதரிக்கிறது,. இது LPA மூலம் ஒரு பணிசார்ந்த அதிகாரம் பெற்ற பிரதிநிதியை டோனீயாக நியமிப்பதன் மூலமாகவோ அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலம் ஒரு அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகவோ நியமிக்கிறது.

## சட்டக் கோட்பாடுகள்

மனநல ஆற்றல் சட்டத்தின் கீழ் ஐந்து சட்டப்பூர்வ கொள்கைகள் உள்ளன. அவற்றை மனநல ஆற்றல் இல்லாத அல்லது ஒருவேளை மனநல ஆற்றல் இல்லாத நபர்களைக் கையாளும் போது அனைவரும் பின்பற்ற வேண்டும்.

## விவேகமற்ற முடிவு

இது சட்டக் கொள்கைகளில் ஒன்றைக் குறிக்கிறது. மனநல ஆற்றல் உள்ள ஒருவருக்கு மற்றவர்களின் பார்வையில் விவேகமற்ற முடிவை எடுக்க உரிமை உண்டு. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அந்த நபர் மனநல ஆற்றலை இழந்துவிட்டார் என்று அர்த்தமல்ல.

**பொது காப்பாளர் அலுவலகம்**
சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சகம்

3 பீஷன் இடம் #03-00
CPF பிஷன் கட்டிடம்
சிங்கப்பூர் 579838

**தொலைபேசி:** 1800 111 2222
**மின்னஞ்சல்:** enquiry@publicguardian.gov.sg
**இணையதளம்:** msf.gov.sg/opg

நவம்பர் 2022 பதிப்பு

OFFICE OF THE PUBLIC GUARDIAN

MSF MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT